பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 03 | ஞாயிற்றுக்கிழமை | 17.03.2024 | அதிர்வு 229

## சாட்டி கடலில் மூழ்கி 11 வயது சிறுமி சாவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், சாட்டி கடலில் நீராடிய சிறுமி ஒருவர் நீரில் மூழ்கிச் சாவடைந்துள்ளார்.

இந்தப் பரிதாப சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது. 06▶



# உட்கட்சி மோதல்களால் நாங்கள் இன்னும் வலுப்பெற்றுள்ளோம்!

## தமிழரசின் மட்டு. மாவட்ட எம்.பி. சாணக்கியன் இப்படி தெரிவிப்பு

"இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் என்றும் ஒற்றுமையாகச் செயற்பட்டு தந்தை செல்வாவின் வழியில் எமது மக்களுக்கான பயணத்தைத் தொடர்வார்கள். உட்கட்சி மோதல்கள் எமது மக்களுக்கான குறிக்கோள்கள், கொள்கைகளைச் சிதைப்பதில்லை. நாம் இன்னும் வலுப்பெற்றுள்ளோம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாவட்ட செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

(விரிவான செய்தி 14ஆம் பக்கத்தில்)

ஐக்கிய மக்கள் சக்திக்கும் பொதுஜன பெரமுனவுக்கும்

## ஜனாதிபதித் தேர்தலில் கடும் போட்டி நிலவுமாம்



### எஸ்.பி. ஆரூடம்

(ஆ.ரமேஷ்)

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் கடும் போட்டி நிலவக்கூடும் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். 06▶



வெடுக்குநாறிமலை வழக்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வவுனியா நீதிமன்றத்திற்கு மீண்டும் வருகின்றது.

அதற்கு முன்னர் – நாளை மாலையில் – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இந்த விடயம் குறித்துச் சந்தித்துப் பேசுவதற்கு முயற்சிப்பது பற்றி தமிழ்த் தேசிய கட்சிகள் ஆராய்ந்து வருகின்றன.

நேற்று நண்பகல் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பியின் யாழ்ப்பாணம், நல்லூர், கோவில் வீதி இல்லத்தில் 06▶



# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் பொலிஸ்மா அதிபரும் யாழ். விஜயம்

(எஸ்.நிதர்ஷன்)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்டோர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

யாழ். தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் வர்த்தக சமூகத்தினரை அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.












# கடற்கரையைச் சுத்தமாக வைத்திருக்க புதிய செயலி

கடற்கரைகளில் கழிவு முகாமைத்துவத்திற்கு பயன்படுத்தக்கூடிய கைபேசி செயலி (Beach Cleanup Coordination APP) அறிமுகம் தொடர்பான கலந்துரையாடல் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கடலோர மற்றும் கடல்சார் சூழலின் நிலையான வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளை முறையாக ஒருங்கிணைத்து, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைமையீட்டுடன் இந்த கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

நிலைபேறான கடல் மற்றும் கரையோர வலயத்தை உறுதி செய்யும் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் சமுத்திரம் மற்றும் கரையோரத்தின் தூய்மையைப் பேணுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய சாகல ரத்நாயக்க, அந்த செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு இந்த புதிய செயலி உதவும் எனவும் குறிப்பிட்டார்.

கரையோரத் தூய்மைத் திட்டங்கள் மற்றும் கரையோரத் தூய்மையைப் பேணுதல் தொடர்பாக தற்போது நடைமுறைப் படுத்தப்படும் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் இதன் போது சுட்டிக்காட்டிய சாகல ரத்நாயக்க, கடலோர பகுதிகளில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு இது நல்ல பங்களிப்பாக அமையும் என்றார்.

ஆறுகள் மற்றும் கால்வாய்களில் இருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் கழிவுநீர் மற்றும் கழிவு நீர் நீண்ட வெளியேற்ற குழாய்கள் மூலம் வெளியேற்றப்படுவதாலும் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் பிற கடல் நடவடிக்கைகள் மூலம் கடற்கரை மற்றும் கடல் வளங்கள் கடுமையாக மாசுபடுவதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியது.

பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைமையீட்டுடன் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிட்டமையுடன், இந்நந் தொலைபேசி செயலியை இப்பணியின் சரியான ஒருங்கிணைப்புக்கு பயன்படுத்த எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த உள்ளிட்ட அரச அதிகாரிகள், கடற்படைத் தளபதி, பொலிஸ் மா அதிபர் உட்பட பாதுகாப்புப் பிரிவின் தலைவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.











# வடக்கைச் சேர்ந்த 4 அதிகாரிளுக்கு இலங்கை நிர்வாக சேவை விசேட தரம்

(ந.லோகதயாளன்)

இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்துக்கான தெரிவுக்காக நேற்று கொழும்பில் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் அழைக்கப்பட்ட 54 பேரில் 52 பேர் பங்குகொண்டுள்ளனர்.

நாடு முழுவதும் காணப்படும் நிர்வாக சேவை விசேட தரத்திலான 43 வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற நேர்முகத் தேர்வுக்கு 54 அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 52 பேர் சமூகமளித்துள்ளனர்.

தேர்வுக்கான சிரேஷ்ட நிலைப்பட்டியலில் 43, 44, 45 மற்றும் 47 ஆவது இடங்களிலும் வடக்கைச் சேர்ந்த அதிகாரிகளே இடம்பெற்றிருந்த நிலையில் முதல் 43 இடங்களுக்குள் இருந்த ஓர் அதிகாரி நேர்முகத் தேர்வுக்குச் சமூகமளிக்காத காரணத்தால் 44 ஆவது இடத்தில் இருந்த வடக்கைச் சேர்ந்த அதிகாரி தற்போது 43 ஆவது இடத்தைப் பிடித்துக் கொண்டார். அவருக்கும் விசேட தர நிலை கிடைக்கும் வாய்ப்பு பெரும்பாலும் உறுதியாகியுள்ளது.

இருந்தபோதும் முழுமையான பரிசீலனைகளின் பின்னர் இடையில் உள்ள வேறு யாரும் அதிகாரிகள் சந்தர்ப்பத்தை இழந்தால், 43 இற்கு அடுத்த நிலையிலும் வடக்கைச் சேர்ந்த அதிகாரியே இருக்கின்றார் எனத் தெரிகின்றது.

இதேநேரம் தற்போது வரையான முதல் 43 இடங்களுக்குள்ளும் வடக்கைச் சேர்ந்த 4 அதிகாரிகள் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழில் இராணுவத்தினர் வசமுள்ள மேலும் 279 ஏக்கர் நிலம் விடுவிப்பு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் - பலாலி வீதிக்கு கிழக்கே 279 ஏக்கர் நிலத்தை எதிர்வரும் 22 ஆம் திகதி விடுவிக்க நடவடிக்கை இடம்பெறுகின்றது.

மந்திகையில் நெதர்லாந்து அரசின் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட விசேட விபத்து சிகிச்சைப் பிரிவு திறப்பு விழாவுக்கு வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அன்றைய தினம் இந்த 279 ஏக்கர் நிலமும் விடுவிக்கப்படவுள்ளது.

இதற்கமைய வலிகாமம் வடக்கில் படையினர் வசம் உள்ள நிலத்தில் பலாலி வீதிக்கு கிழக்கே தற்போது 647 ஏக்கர் நிலம் படையினர் வசம் உள்ளது. அந்த 647 ஏக்கர் நிலத்தில் இருந்தே இந்த 279 ஏக்கர் நிலம் எதிர்வரும் 22 ஆம் திகதி விடுவிக்கப்படவுள்ளது.

இவ்வாறு விடுவிக்கப்படும் காணிகள் மற்றும் அவை அமைந்துள்ள கிராம சேவகர் பிரிவுகள் என்பன கடந்த வாரம் பலாலி படைத் தளத்தில் மாவட்ட நிர்வாக அதகாரிகளுக்கும் படைத் தரப்பினருக்கும் இடையே இடம்பெற்ற நில விடுவிப்பு தொடர்பான விசேட கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது.

# கால அட்டவணை அடிப்படையில் 7 மாவட்டங்களில் நீர் விநியோகம்

வறட்சியான வானிலை காரணமாக 7 மாவட்டங்களிலுள்ள 15 நீர் வழங்கல் பகுதிகளுக்கு கால அட்டவணை அடிப்படையில் நீர் விநியோகிக்கப்படவுள்ளது என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் - பேருவளை மற்றும் அளுத்கம் இரத்தினபுரி மாவட்டத்தின் - நிவித்திகல் குருநாகல் மாவட்டத்தின் - நாரம்மல் கண்டி மாவட்டத்தின் - கம்பலவத்த, அங்குரம்பர, புஸ்ஸல்ல, புசல்லாவை, மீவதுர, பாரதெக்க் நுவரெலியா மாவட்டத்தின் - ஹட்டன்,கொட்டகலை மாத்தறை மாவட்டத்தின் - ஊருபொக்க் மொனராகலை மாவட்டத்தின் - புத்தல, சூரியஆர - ஆகிய பகுதிகளுக்கு செல்லும் நீர் வழங்கல் கட்டமைப்பில் பிரச்சினை எழுந்துள்ளது

அதற்கு தீர்வாக இந்தப் பகுதிகளுக்கு கால அட்டவணை அடிப்படையில் நீர் விநியோகிக்கப்படவுள்ளது.

இதுவரை கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகிக்கப்படுகின்றது.

கொழும்பு மற்றும் களுத்துறை நீர் விநியோகக் கட்டமைப்பின் பகுதிகளுக்கு குறைந்த அழுத்த நீரே விநியோகிக்கப்படுவதாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை பிரதி பொது முகாமையாளர் அனோஜா களுஆராச்சி தெரிவித்துள்ளார்.

தெஹிவளை, இரத்மலானை, மொரட்டுவை, பாணந்துறை, வாதுவ மற்றும் வஸ்கடுவ ஆகிய பகுதிகளுக்கும் குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

நீரை சிக்கனமாக பயன்படுத்தாவிட்டால், எதிர்வரும் நாள்களில் கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாணத்தின் ஏனைய பகுதிகளுக்கும் கால அட்டவணை அடிப்படையில் நீர் விநியோகத்தை முன்னெடுக்க நேரிடும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பிரதி பொது முகாமையாளர் அனோஜா களுஆராச்சி தெரிவித்துள்ளார்.

# இந்திய மீனவர்கள் 19 பேர் இன்று அதிகாலை கைது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 19 இந்திய மீனவர்கள் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் இரு படகுகளில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட வேளையே கடற்படையினரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஒரு படகில் 12 மீனவர்களும், மற்றைய படகில் 7 மீனவர்களும் எல்லை தாண்டிய வேளை கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்று கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.



# இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தை இத்தாலியில் ஏற்பது இடைநிறுத்தம்!

## அதனால் அங்குள்ள இலங்கையருக்குச் சிக்கல்

இலங்கையில் வழங்கப்படும் சாரதி அனுமதிப்பத்திரம் இத்தாலியில் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டு வந்த நிலையில், அந்த நடைமுறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமையினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2 ஆண்டுகளாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தை இத்தாலிய சாரதி அனுமதிப்பத்திரமாக பயன்படுத்த அனுமதிக்கும் முறையின் மூலம் பெரும் எண்ணிக்கையானோர் தொழில் வாய்ப்புகளைப் பெற்றனர்.

இந்த நிலையில், இந்த முறைமை செயற்படுத்தப்படாமை காரணமாக, ஏராளமானோர் தொழிலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்த விசேட நடைமுறை பின்பற்றப்பட்டு வந்ததாக வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, மீண்டும் அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்காக, இரு நாட்டு போக்குவரத்து திணைக்கள அதிகாரிகளும் ஆலோசித்து வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# குடிதண்ணீர் பிரச்சினைகளை 117 என்ற இலக்கத்திற்கு அழைத்து தெரிவிக்கலாம்

கேகாலை, கம்பஹா மாவட்டங்களில் ஆயிரத்து 232 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரம் பேர் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், நாட்டில் வறட்சி தொடர்ந்து வரும் நிலையில், குடிதண்ணீர் பிரச்சினைகளை எதிர்நோக்கும் பொதுமக்களுக்கு இடர் முகாமைத்துவ நிலையம் அவசர அழைப்பு இலக்கமொன்றை அறிவித்துள்ளது.

குடிதண்ணீரை பெற்றுக்கொள்வதில் காணப்படும் சிக்கல்களை 117 என்ற இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியுமென இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

அத்துடன், கிராம உத்தியோகத்தர்கள் ஊடாகவும், இந்த வறட்சிக் காலத்தில் குடிதண்ணீர் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூடிய தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்கள் மற்றும் பிரமுகர்கள் இவ்வாறு தீர்மானித்திருக்கின்றனர்.

நாளை மாலையில் ஜனாதிபதியைச் சந்தித்து, அவர் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தை அல்லது பொலிஸ் தரப்பைக் கையாண்டு, நாளை மறுதினம் வழக்குத் தொடர்பில் ஏதும் செய்ய முடியுமா என்று தெரியவில்லை.

ஆயினும், முயற்சி திருவினையாக்கும் என்று நம்புவோம்.

\+ \+ \+

நேற்று முன்தினம் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தனின் கொழும்பு இல்லத்திலிருந்து சில தடவைகள் சுமந்திரன் எம்.பியின் கைத்தொலைபேசிக்கு அழைப்பு எடுத்திருக்கின்றார்கள். தொடர்பு கிடைக்கவில்லை. நேற்று முன்தினம் இரவுதான் சம்பந்தனின் உதவியாளர்களினால் சுமந்திரனைப் பிடிக்க முடிந்தது.

சம்பந்தன் ஐயா அவருடன் அவசரமாகப் பேச விரும்புகின்றார் என்று சுமந்திரனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. தொலைபேசியில் பேசும் நிலையில் சம்பந்தன் ஐயா இல்லை என்று கூறப்பட்டமையால் அடுத்த நாள் - அதாவது நேற்று - காலையில் சுமந்திரன் நேரில் சம்பந்தன் ஐயாவின் வீட்டுக்கு வந்து செல்வார் என்று சுமந்திரன் பக்கத்தில் இருந்து தகவல் தெரிவிக்கப்பட்டதாக அறிய வந்தது.

கடும் சளி காரணமாக சுவாச நெருக்கடியோடு ஆஸ்பத்திரி தீவிர சிகிச்சைக் கண்காணிப்புப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த சம்பந்தன் இரண்டொரு தினங்களுக்கு முன்னர்தான் வீடு திரும்பியிருந்தார்.

சுமந்திரன் நேற்றுப் பகல் சம்பந்தன் வீட்டுக்கு வந்து, சுமார் அரை மணி நேரம் தங்கி இருந்து திரும்பினார் என்று அறிந்து, சுமந்திரனுடன் தொடர்பு கொண்டேன்.

"ஐயாவைச் சந்திக்கப் போயிருந்தீர்களாம். என்ன நடந்தது? ஏதேனும் தகவல் உண்டா?" - என்று கேட்டேன்.

சுமந்திரனின் பதிலில் கவலை ரேகைகள் ஆழமாக படர்ந்து இருந்ததை உணர்ந்தேன்.

"இல்லை.. ஐயா பேசுவது விளங்கவில்லை... ஒரே விடயத்தைத் திரும்பத் திரும்பக் கூற முயற்சிக்கின்றார். ஆனால் என்னாலோ அல்லது வேறு யாராலுமோ அவர் என்ன கூற வருகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அடிக்கடி 'ஜவ்னா', 'ஜவ்னா' என்று குறிப்பிட்டார். யாழ்ப்பாணம் பற்றி ஏதோ கூற முயற்சிக்கின்றார் என்று புரிந்தேன். யாழ்ப்பாண நிலைமை பற்றி அறிய முயன்றாரோ தெரியவில்லை. தேர்தல்கள் பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் வந்தன. ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடக்கும் என்று குறிப்பிட்டேன்" - என்றார் சுமந்திரன் எம்.பி.

சம்பந்தன் ஐயாவின் இயலாமை குறித்து சுமந்திரன் கலக்கமும் கவலையும் அடைந்துள்ளார் என்பதைப் புரிந்து கொண்டேன். நேற்றைய சந்திப்புக் குறித்து அதிகம் விளக்கமாகப் பேசவோ, பதில் கூறவோ அவர் விரும்பவில்லை என்பதையும் அவரது பதிலில் உணர்ந்தேன்.

என் சுயாதீன வட்டாரங்கள் மூலம் தகவல்களைத் தேடினேன்.

சளி காரணமாக அவருக்கு ஹெவியான ஆன்டிபயாடிக்ஸ் மருந்துகள் கொடுத்து இருக்கின்றார்கள். அதனால் அவர் அயர்ச்சியின் உச்சத்தில் இருக்கின்றார். சுமந்திரனுடன் பேச முற்படும் போது கூட ஓரிரண்டு நிமிடங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது தன்னை அறியாமல் சோர்ந்து அசந்து, அயர்ந்து விடுகின்றார் சம்பந்தன் ஐயா என உதவி வட்டாரங்களில் இருந்து அறிந்து கொண்டேன்.

"சுமந்திரன் வந்தார். தொடர்ந்து பேச முடியவில்லை. இடையிடையே ஐயா அயர்ந்து விடுகின்றமையால் பேச்சு தொடராக இல்லை. ஐயாவின் பேச்சையும் புரிய முடியவில்லை." - என்று மூன்றாம் தரப்பு மூலம் தகவல் அறிந்து கொண்டேன்.

சம்பந்தன் ஐயாவைத் தற்போது பீடித்திருக்கும் கடும் சளித் தொற்றில் இருந்து அவர் மீண்டால்தான் அவருடன் மீண்டும் மனம் விட்டு பேச முடியும் என்பதுதான் இப்போதைய நிலைமை.

அவர் மறவா நெஞ்சியிருத்தியிருக்கும் திருகோணமலை ஆதி பத்திரகாளித் தாயின் உற்சவகாலம் இது. இன்று நான்காம் திருவிழா. அவர் மீண்டெழ பத்திரகாளி ஆச்சி அருள்புரியட்டும்!

## யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 1,067 பேர் கைது

யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 1067 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் போதைப்பொருள்கள் தொடர்பில் 984 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட செயலணியின் ஆவணங்களில் பெயரிடப்பட்டுள்ள 50 சந்தேகநபர்களும் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், குற்றப்பிரிவின் பட்டியலில் உள்ள 83 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்புகளில் ஹெரோயின், ஐஸ், கஞ்சா மற்றும் மாவா உள்ளிட்ட போதைப்பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## வெப்பமான காலநிலை காரணமாக தோல் நோய்கள் ஏற்படும் அபாயம்



நாட்டில் நிலவும் வெப்பத்துடனான காலநிலை காரணமாக தோல் நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தோலில் வெள்ளை நிறப் புள்ளிகள் தோன்றல் மற்றும் தோலில் அரிப்பு ஏற்படுதல் உள்ளிட்ட நோய் அறிகுறிகள் காணப்படுகின்றன என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நோய் நிலைமைக்கு சிறுவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர் எனவும், இது போன்ற நோய் நிலைமைகள் குறித்து மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறும் வைத்திய நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

## எட்டு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர்கள் உட்பட 18 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்ற உத்தரவு

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் 8 பேர் உள்ளிட்ட 18 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக, இடமாற்றம் மற்றும் புதிய நியமனங்களுக்கு பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன் படி, சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் 08 பேர் மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் 8 பேருக்கு இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன் பிரகாரம், கல்கிசை பிரிவுக்கு பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஈ.எம்.எம்.எஸ். தெஹிதெனிய குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வளவு காலமும் பணிப்பாளராக செயற்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.ஏ.கே. பியசேகர களுத்துறை பிரிவிற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## சாட்டி கடலில் மூழ்கி...

(முதலாம் பக்கத்

நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த அவந்திகா விஜயகாந்த் என்ற 11 வயது சிறுமியே உயிரிழந்துள்ளார்.

சிறுமியின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதித் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்விரு கட்சிகளுக்கும் வாக்காளர்கள் அளிக்கும் 78 சதவீத வாக்குகளால் இந்தப் போட்டி நிலவ வாய்ப்புள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி 15 சதவீத வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும்.

அதேநேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆகியவை 5 சதவீத வாக்குகளையே பெறும்.

அதேபோன்று புதிதாகக் களமிறங்கும் கட்சி மற்றும் எம்மிடமிருந்து பிரிந்து சென்றவர்களின் கட்சி ஆகியவை 2 சதவீத வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும்."

- என்றார்.



# இரத்தினக்கற்கள் தொழிற்துறையில் உள்ளவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதியின் அவதானம்

இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதன் மூலம் அத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வரிக் கொள்கையில் தற்போதைக்கு மாற்றத்தை ஏற்படுத்த முடியாது எனவும், ஆனால் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலை வலுப்படுத்துவதற்கு பொருத்தமான முறைமையொன்று தயாரிக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முன்மொழிவுகளைத் தயாரித்து இரண்டு வாரங்களுக்குள் வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுடன் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைகள், இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலைப் பாதித்துள்ள பிரச்சினைகள் மற்றும் தொழில் தொடர்பான ஏனைய விடயங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்து தெரிவிக்கையில் –

“இலங்கையில் இரத்தினக்கல் தொழிற்துறை தொடர்பான ஏற்றுமதிகளை அதிகரிப்பதுடன் பெறுமதி சேர்ப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். எதிர்காலத்தில் சப்ரகமுவ மாகாணம் மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் சுரங்கத் தொழில்களை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைவாக இலங்கையின் இரத்தினக்கல் வர்த்தகர்களுக்கு அந்தப் பகுதிகளில் சுரங்கத் தொழில்களை ஆரம்பிப்பதற்கான பூரண வாய்ப்பு கிடைக்கும்.

இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலும் இரத்தினக்கல் மற்றும் சுரங்கத் தொழில்களை ஆரம்பிக்க முடியுமா என்பது தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படும்.” – என்றார்.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்காவிட்டால் இவ்வாறான விடயங்களை பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. மக்களின் உயிர்கள் கூட பாரிய ஆபத்தில் இருந்த வேளையில் நாட்டின் பொறுப்பை ஏற்ற ஜனாதிபதி இன்று நாட்டில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றம் குறித்து மகிழ்ச்சியடைகின்றேன் எனக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச். எஸ்.சமரதுங்க மற்றும் துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.
















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கர்த்தினால் மல்கம் ரஞ்சித் சுமத்தும் குற்றச்சாட்டுக்கள்

ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல்கள் பற்றிய விசாரணைகள் தொடர்பில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அரசு தரப்புக்கு தலையிடி கொடுக்கும் புதிய கருத்துக்களை - குற்றச்சாட்டுகளை - மீண்டும், தொடர்ந்தும், முன் வைத்து வருகின்றார்.

தேர்தல் நெருங்கும் சமயத்தில் கிறிஸ்தவ மக்களை நாட்டின் ஆட்சியாளர்களுக்கு எதிராகத் திருப்பும் கருத்தியலாக இக்குற்றச்சாட்டுகள் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கவை.

“ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளின் போது அளிக்கப்பட்ட சாட்சியங்களை அரசிடம் கோரியிருந்தோம். எங்களுக்குத் தரப்பட்ட சி.டிகளை எமது சட்டத்தரணிகள் ஆராய்ந்தார்கள். 70 ஆயிரம் பக்க சாட்சியங்கள் உள்ளன. ஆனால் பிரதான தாக்குதல் நபர் சஹ்ரான் ஹாஷிமின் மனைவி ஹதியா மற்றும் பயங்கரவாதக் குழுவுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணிய முன்னணி செயற்பாட்டாளரான சாரா ஜெஸ்மின் போன்ற முக்கிய சாட்சிகளின் சாட்சியங்கள் அடங்கிய - 1,500 பக்கங்களுக்கு மேல் உள்ள - விடயங்களை அவற்றில் காணோம்.” - என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் குறிப்பிடும் பல தகவல்கள் முக்கியமானவை. அவற்றை மூடி மறைக்க அரசு ஏன் முயற்சிக்கின்றது என்ற அவரது கேள்வி நியாயமானதாகவே தோன்றுகிறது.

“இந்தத் தாக்குதல்கள் குறித்து முழுமையான, சுதந்திரமான மற்றும் நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை உணர்ந்து செயல்படுமாறு அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கும் வகையில் பல முயற்சிகளை நாங்கள் ஏற்பாடு செய்தோம்.

“தற்போதைய அரசாங்கத்தின் பலம் வாய்ந்த அமைச்சரான பிள்ளையானின் (சிவநேசதுரை சந்திரகாந்தனின்) தனிப்பட்ட செயலாளரான ஆசாத் மௌலானா வழங்கிய சாட்சியங்கள் போன்ற புதிய ஆதாரங்கள் தொடர்பில் இது வரையில் விசாரணைகள் நடத்தப்படவேயில்லை.

“சஹ்ரானையும் அவரது குழுவையும் இராணுவப் புலனாய்வு இயக்குநரகம் (DMI) அணுகுவதற்கு உதவியவர் பிள்ளையான்தான்.

“தற்போதைய அரசாங்கத்தின் அரச புலனாய்வுப் பணிப்பாளர் சுரேஷ் சலே தலைமையில் அப்போது இராணுவப் புலனாய்வு இயக்குநரகம் இருந்தது. அதனிடமிருந்து அப்போது இந்தத் தாக்குதல் குழு பிள்ளையான் மூலம் பணம் பெற்றதையும் அவர் (ஆசாத் மௌலானா) உறுதிப்படுத்தியுள்ளார். சுரேஷ் சலேக்கும் சஹ்ரானுக்கும் இடையில் சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன.

“தற்போதைய பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் உத்தரவின் பேரில் தெற்கு நெடுஞ்சாலையின் கெலனிகம வெளியேறும் பகுதியில் சந்தேகத்திற்கிடமான பொருள்களைக் கொண்ட லொறி ஒன்று சோதனைக்கு உட்படுத்தப்படாமல் விடுவிக்கப்பட்டது. அது சென்றடைந்த இலக்கு பாணந்துறை, வலானாவில் உள்ள சஹ்ரான் ஹாஷிமின் பாதுகாப்பான இல்லமாகும். மேலும் அந்த லொறி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நெருங்கிய தொடர்புள்ள அவன்ட் கார்ட் பாதுகாப்பு சேவைக்கு சொந்தமானது. அந்த லொறி வெடிபொருள்களை உள்ளடக்கியதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.”

- இப்படியெல்லாம் பகிரங்கமாகக் குற்றச்சாட்டுகளை அடுக்கியிருக்கின்றார் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இக்குற்றச்சாட்டுகள் குறித்து வெளிப்படையான - நம்பகமான - நியாயமான - நேர்மையான - விசாரணை ஒன்று நடைபெறுவதை உறுதிப்படுத்தாமல், விடயத்தை மூடி மறைக்க முற்படுகின்றமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட்ட இந்த ஆட்சி பீடமும் இவ்விடயத்தில் கரவு எண்ணத்துடன் தான் செயல்படுகின்றது என்பதை உறுதியாக்குகின்றது.

இவ்விடயத்துக்கு நீதி, நியாயமான - திருப்தியளிக்கக் கூடிய - நடவடிக்கைத் திட்டம் ஒன்றை ரணில் அரசு இனிமேலும் எடுக்கத் தவறுமானால், வரும் ஜனாதிபதித் தேர்தலில் கணிசமான கிறிஸ்தவ வாக்குகளை அத்தரப்பு இழக்க நேரிடும் என்பது நிச்சயம்.

# 26 சட்டப்பேரவைகளுக்கு ஏப்ரல் 19 இல் இடைத்தேர்தல்






தமிழகத்தின் விளவங்கோடு உள்ளிட்ட இந்தியா முழுவதும் வெற்றிடமாக உள்ள 26 சட்டப்பேரவை இடங்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலுடன் இடைத்தேர்தல் நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மக்களவைத் தேர்தல் 2024 இற்கான அட்டவணையை இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் நேற்று அறிவித்தது. அதன்படி, ஏப்ரல் 19 தொடங்கி ஜூன் 1 வரை 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தல் நடைபெறுகிறது.

தமிழகம், புதுச்சேரியில் ஒரே கட்டமாக ஏப்ரல் 19 இல் வாக்குப் பதிவு நடைபெறுகிறது. அன்றைய தினமே தமிழகத்தில் வெற்றிடமாக உள்ள விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கேரள மாநிலத்தை அண்மித்த தொகுதி விளவங்கோடு. இந்தத் தொகுதியில் கடந்த சட்டப் பேரவை தேர்தலில் போட்டியிட்டு விஜயதரணி வென்றவர். இவர் சமீபத்தில், பா.ஜ.கவில் இணைந்தார். இதையடுத்து, எம்.எல்.ஏ. பதவியை இராஜினாமா செய்தார். எனவே, தொகுதி வெற்றிடமாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில்தான் மக்களவை தேர்தலுடன் விளவங்கோடு தொகுதிக்கான தேர்தலும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஏப்ரல் 19 இல் வாக்குப் பதிவு நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் மார்ச் 20 ஆம் திகதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்களவை தேர்தலுடன் விளவங்கோடு உட்பட நாடு முழுவதும் 13 மாநிலங்களில் உள்ள சட்டப்பேரவை தொகுதிகளின் இடைத்தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் தமிழகத்தில் விளவங்கோடு, கர்நாடகாவில் ஷோராப்பூர், ஹிமாச்சல் பிரதேசத்தில் ஆறு தொகுதிகள், தெலுங்கானா, திரிபுரா, மகாராஷ்டிரா, ஹரியானா, ஜார்கண்ட் மற்றும் பிஹார் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு தொகுதி, மேற்குவங்கத்தில் இரண்டு தொகுதிகள், உத்தரபிரதேசத்தில் 4 தொகுதிகள், குஜராத்தில் 5 தொகுதிகளுக்கான சட்டப்பேரவை இடைத்தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

# தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தன




“ஏப்ரல் 19 ஆம் திகதி தொடங்கி ஜூன் 1 வரை ஏழு கட்டங்களாக மக்களவைத் தேர்தல் நடைபெறுகிறது. நாடு முழுவதும் மக்களவைத் தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4 ஆம் திகதி எண்ணப்படுகிறது. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நிலையில், நாடு முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தன.”

– இவ்வாறு தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தல் 2024 ஐ ஒட்டிய கட்டுப்பாடுகள் குறித்து ல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

“உண்மையான, ஆரோக்கியமான தேர்தலை உறுதிப்படுத்த தீவிர நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துள்ளோம். சுதந்திரமான நேர்மையான தேர்தலை நடத்துவதில் வன்முறை, பணம், தவறான தகவல்கள், நடத்தை விதிகளை மீறுவது ஆகிய 4 சவால்கள் இருக்கின்றன. அனைத்து வேட்பாளர்களும் சமமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்த உறுதியான உத்தரவுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு நாங்கள் வழங்கி இருக்கிறோம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட வேண்டும், கண்கோணிப்புகளை தீவிரப்படுத்த செக்போஸ்ட்களையும் ட்ரோன்களையும் பயன்படுத்த உத்தர விட்டுள்ளோம். சட்டவிரோத பணம், மதுபானம், போதைப் பொருள்கள், இலவசங்கள் ஆகியவற்றைத் தடுக்க உரிய அதிகாரிகளோடு விரிவான ஆய்வுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

தவறான தகவல்கள் பரப்பப்படுவதை தற்போதைய டிஜிட்டல் யுகத்தில் தடுப்பது சிக்கலானது. எனினும், தவறான தகவல்கள் பரப்பப்படுவதைத் தடுக்க தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போதைய சட்டங்களின் அடிப்படையில் தவறான தகவல்களை பரப்புவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் நடத்தை விதிகள் முறையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க 2,100 கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.” – என்றார்.

# ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது ஆளில்லா விமானங்கள் தாக்கியதால் பாரிய தீ பரவல்







ரஷ்யாவின் சமாரா ஒப்லாஸ்டில் உள்ள இரண்டு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை ஆளில்லா விமானங்கள் தாக்கியதில் அந்த சுத்திகரிப்பு நிலையங்களில் பாரிய தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் நேற்று நடந்ததாகக் கூறப்படுகிறது. முதல் ஆளில்லா விமானம் சிஸ்ரானில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தை தாக்கியது. அங்கு தீ விபத்து ஏற்பட்டது. பின்னர் 500 சதுர மீட்டர் பரப்பளவில் அந்த தீ பரவியுள்ளது.

அதே நேரத்தில், நோவோகுய்பிஷெவ்ஸ்க் சுத்திகரிப்பு நிலையத்தை பல ஆளில்லா விமானங்கள் தாக்கின. அங்கும் தீ பரவி அரை மணி நேரத்தில் அணைக்கப்பட்டது.

இதற்கிடையில், அதிகாரிகள் இதை ஒரு "தாக்குதல் முயற்சி" எனவும் நோவோகுய்பிஷெவ்ஸ்க் அந்த தாக்குதலை முறியடித்துள்ளனர் என்றும் தெரிவிக்கின்றனர்.

இந்த தாக்குதல்களில் எவ்வித உயிர்ச்சேதமும் ஏதும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

லிபெட்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் ஒரே இரவில் ஆளில்லா விமானங்களால் தாக்கப்பட்டதாவும் அறியப்படுகிறது.

# இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 36 பேர் உயிரிழப்பு





காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் ஒரே குடும்பதைச் சேரந்த 36 பேர் உட்பட குறைந்தது 80 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

காசா நகரில் அல்-ஷிஃபா மருத்துவ வளாகத்திற்கு அருகே இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் ஏழு மாடி குடியிருப்பு கட்டடத்தின் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் பல ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளன. இதில் பலர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்தனர் என அதிகார பூர்வ பலஸ்தீனிய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், காசா நகரில் அல்-ஜலா தெருவில் உள்ள குடியிருப்பு மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் வான்வழித் தாக்குதல் நடத்தின. இதில் பத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

காசா நகரில் அல்-துஃபா சுற்றுப்புறத்தில் உள்ள ஒரு வீட்டை குறிவைத்து இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

மற்றொரு நகரத்தில் உள்ள அல்-நஸ்ர் பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மீது நடத்தப்பட்ட தாககுதலில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மேலும், இஸ்ரேலிய இராணுவத்தின் பீரங்கி மத்திய காசாவில் உள்ள நுசிராத் முகாமில் இரண்டு வீடுகளை குறிவைத்தது, இதன் விளைவாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குறைந்தது 36 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர்.

தெற்கு காசாவில் உள்ள ரஃபா நகரில், மக்கள் வசிக்கும் வீட்டின் மீது குண்டுவீசித் தாக்கியதில், ஏராளமான பொதுமக்கள் காயமடைந்தனர்.

காசாவின் சுகாதார அமைச்சின் கூற்றுப்படி, ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கி காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் 31 ஆயிரத்து 490 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 73 ஆயிரத்து 439 பேர் காயமடைந்துள்ளனர்.

# தமிழ் மக்கள் போராட்டங்களை புறக்கணிக்கிறார்களா?




புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசியப் போராட்டத்தின் செல்நெறி தொடர்பிலான குழப்பமும், அதனால் எழும் அதிருப்தியும் தமிழ் மக்களிடம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னராக மீள் எழுச்சி தொடர்பில் தமிழ் மக்கள் பெரும் ஓர்மத்தை வெளிப்படுத்தினார்கள். ஆனால், அதனை சரியாக வழி நடத்தி அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல வேண்டிய தமிழ்த் தேசிய அரசியல் தளமும், புலமைத் தரப்பும் தங்களின் தீர்க்கதரிசனமற்ற நடவடிக்கைகளினால் தோல்வியின் பக்கத்திற்கு நகர்த்தியிருக்கின்றன. இதனால், மக்கள் ஆற்றாமையினால் அல்லாடுகிறார்கள். இந்தக் கட்டத்தை தமிழ்த் தேசிய விடுதலையை நிராகரிக்கும் அக – புறத் தரப்புக்கள் வெகு இலகுவாக கையாண்டு தங்களின் திட்டங்களை கனகச்சிதமாக முன்னெடுக்கின்றன.

கடந்த வாரங்களில் இடம்பெற்ற இரண்டு சம்பவங்களை உதாரணமாக முன்வைத்துப் பேசினாலே, தமிழ்த் தேசியப் போராட்டத்தின் அடிப்படைகள் எவ்வாறு ஆட்டம் காண்கின்றன என்பதை இலகுவாக புரிந்து கொள்ள முடியும்.

முதலாவது விடயம், யாழ்ப்பாணம் முற்ற வெளியில் இலங்கை விமானப்படை நடத்திய கண்காட்சியில் மக்களின் அதிகளவான வருகை உணர்த்துவது.

இரண்டாவது விடயம், வவுனியா வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலய சிவராத்தி பூசையில் கலந்து கொண்டவர்கள் கைது மற்றும் அதனைத் தொடர்ந்து நிகழும் போராட்டங்கள் வெளிப்படுத்துவன.

விமானப் படையின் கண்காட்சிக்கு குறைந்தது எழுபதாயிரம் மக்கள் வருகை தந்திருப்பார்கள் என்று கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலத்தில் நடத்தப்பட்ட பொருட்காட்சி அல்லது கண்காட்சிகளில் கூடிய மக்களின் அளவைக் காட்டிலும் இது பல மடங்குகள் அதிகமானது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்தியப் பாடகர் ஹரிகரனின் இசை நிகழ்ச்சியிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள். அதுபோல, தென் இந்திய சினிமா நட்சத்திரங்கள், இசைக் கலைஞர்களின் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றால் ஆயிரக்கணக்கான மக்கள் அதில் கலந்து கொள்கிறார்கள்.

தொடர் அடக்குமுறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உள்ளான சமூகமொன்று தனக்கு கிடைக்கின்ற சின்ன இடைவெளிகளைக் கூட அதியுச்சமாக பயன்படுத்திக் கொள்ள முயலும். வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் வாழ்வியல் என்பது அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக நெருக்கடிகளினால் ஆட்கொள்ளப்பட்டிக்கின்றது. இயல்பு வாழ்வு என்பது எட்டாக்கனியாகிவிட்டது. அதிகளவான மக்கள் இயல்பு வாழ்வு என்பதே இராணுவ மயப் படுத்தப்பட்டது அல்லது ஆயுத முனைகளினால் தீர்மானிக்கப்படுவது என்று உள்ளூற நம்பத் தொடங்கிவிட்டார்கள். இந்த நிலையினால், அதிகளவில் இராணுவப் பிரசன்னம் குறித்த விழிப்புணர்வோ, சிவில் நடவடிக்கைகளின் தேவை தொடர்பிலான அடிப்படைகளையோ உணர்ந்து கொள்ளவில்லை. அது,சர்வதேச ரீதியில் ஆயுதப் போராட்ட வாழ்வியலுக்குள் வாழ்ந்த சமூகங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்தான். ஆனால், அதிலிருந்து வெளி வர நினைக்கும் தரப்புக்கள், இயல்பு வாழ்வுக்கான அடிப்படைகள் குறித்து தெளிவுபடுத்தப்பட வேண்டும். அதனை, புலமைத் தரப்புக்களும் சிவில் சமூகக் கட்டமைப்பும் செய்ய வேண்டும். ஆனால், அதனைத் தமிழ் மக்கள் மத்தியில் எந்த வொரு தரப்பும் செய்திருக்கவில்லை. மக்களே, தாங்களே மெல்ல மெல்ல விடயங்களை புரிந்து கொண்டு எதிர்வினையாற்ற தொடங்கினார்கள்.

இராணுவப் பிரசன்னத்துக்கு எதிரான தமிழ் அரசியல்வாதிகளின் போராட்டங்கள் அல்லது புலமைத் தரப்பினரின் கருத்துக்கள் என்பன, தமிழ் மக்களின் போராட்ட உணர்வு மேலெழுந்த பின்னராக வருவது. மாறாக, ஒருபோதும் மக்களை வழிநடத்தும்படியாக இருந்ததில்லை. அதிகளவான அரசியல் தலைவர்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், புலமைத் தரப்பினர் என்று தங்களை அடையாளப்படுத்துபவர்களும் மக்கள் அமைதியாக இருந்திருந்தால், இராணுவப் பிரச்சனத்துக்கு எதிராகவோ, நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவோ போராடும் நிலைக்கு நகர்ந்திருக்க மாட்டார்கள். அவர்கள், பதவி பகட்டுகளுக்குள் தங்களின் தலைகளைப் புதைத்துக் கொண்டு இருக்கவே விரும்புகிறார்கள். அல்லது, தங்களின் தனிப்பட்ட நலன்

தொடர்ச்சி ▼



# தமிழ் மக்கள் போராட்டங்களை புறக்கணிக்கிறார்களா?

தொடர்ச்சி ▲

களைக் குறிவைத்துக் கொண்டு செயற்படுவதில் அதிக அக்கறையோடு இருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியப் போராட்டம் தனிப்பட்ட நலன்களை முன்வைத்து எழுந்தது அல்ல. அது, பௌத்த – சிங்களப் பேரினவாத சிந்தனைக்கு எதிராக எழுந்தது. பெரும் அர்ப்பணிப்புக்களினால் நிலைபெற்றது. ஆனால், இன்றைக்கு தமிழ்த் தேசிய அரசியலை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களில் பெரும்பான்மையானோர் தனிப்பட்ட நலன்களை குறிவைத்த தரப்பினர். அவர்களிடத்தில் சுயநலம், அதிகார மோகம் என்ற விடயங்களைத் தாண்டிய எதுவும் இல்லை. அப்படிப்பட்டவர்களின் அரசியல் செல்நெறி என்பது மக்கள் விரோதமானதாகவே இருக்கும். அங்கு எந்தவித பொது நலனையும் எதிர்பார்க்க முடியாது.

தங்களை தமிழ்த் தேசியப் போராளிகளாக – காவலர்களாக சமூக – ஊடங்களில் முன்னிறுத்தும் பலரும் வசதி வாய்ப்புக்காக எவ்வளவுக்கு வேண்டுமானாலும் கீழிறங்கி செயற்படுவதற்கு தயாராக இருக்கிறார்கள். விமானப்படையின் கண்காட்சியில் தங்களின் தொழில் முயற்சிகளை காட்சிப்படுத்துவதற்காக, மக்களை முட்டாளாக்கும் வியாக்கியானங்களையெல்லாம் செய்தவர்கள் இருக்கிறார்கள். அதுவும், எதிரியை அழிப்பதற்காக எதிரிக்குள் நுழைந்து அழிக்க வேண்டும் என்றெல்லாம் வாதித்திருக்கிறார்கள். அதாவது, விமானப்படையின் கண்காட்சியில் தங்களின் தொழில் முயற்சி காட்சிக் கூடத்தை அமைப்பது என்பது, எதிரிக்குள் ஆழ ஊடுருவி அழிப்பதாக அர்த்தப்படுத்தும் அபத்தம் எல்லாம் நிகழ்கின்றது. இந்த அபத்தத்தை செய்கிறவர்கள் தங்களை தமிழ்த் தேசியத்தின் காவலர்களாக முன்னிறுத்துவதும், நிகழ் அரசியலைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்றாற்போல் இயங்குபவர்களை துரோகிகளாக அல்லது தமிழின விரோதிகளாக சித்தரிக்கிறார்கள்.

தமிழ் மக்களை இயல்பு வாழ்வின் பக்கத்திற்கு நகர்த்துவது என்பது எதிரிகளிடம் இருந்து விடுதலை பெறுவதோடு மாத்திரம் நிகழ்வது அல்ல. மாறாக, தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருக்கும் பிற்போக்குத்தனங்கள் மற்றும் தேவையற்ற திணிப்புக்களுக்கு எதிராக எழுவதில் இருந்தும் ஆரம்பிக்க வேண்டும். குறிப்பாக, நாடக – சுயநல அரசியல் தரப்புக்களிடம் இருந்து விடுபடுவதில் இருந்து ஆரம்பிக்க வேண்டியது.

வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் தங்களின் வாழ்வில் பொழுது போக்கு அல்லது ஆற்றுப்படுத்தும் வழிமுறைகள் அற்று இருக்கிறார்கள். அப்படியான சூழலில்தான் விமானப்படை நடத்தும் இவ்வாறான கண்காட்சிகளில் எல்லாம் அதிகளவில் கூடுகிறார்கள். அது, மக்கள் கடந்த கால வரலாற்றை மறந்து விமானப்படைக்கோ, இராணுவத்துக்கோ வெள்ளையடிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள் என்று கொள்ள வேண்டியதில்லை. மாறாக, தமிழ் சிவில் சமூக பொருளாதார கட்டமைப்பும், புலம்பெயர் தரப்பும் இணைந்து பொருளாதார முன்னேற்றங்கள் மற்றும் பொழுது போக்கு வணிகம் குறித்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து முன்னெடுக்கலாம். அப்போது, தமிழ் மக்கள் விமானப்படையின் நிகழ்வுகளில் பங்குபற்றுவதைத் தவிர்ப்பதற்கான சூழல் உருவாகும். அல்லது, அதற்கான வாதங்கள் நியாயமானதாக மாறும். அதனையெல்லாம் விட்டுவிட்டு, மக்களை குறைகூறுவதால் எந்தப் பயனும் இல்லை.

புலம்பெயர் தமிழ்த் தரப்பில் குறிப்பிட்டளவானோர், வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் ஆயுதப் போராட்ட காலத்தில் இருந்தது மாதிரியே இருக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்போடு இருப்பவர்கள். அவர்களுக்கு வடக்கு கிழக்கில் இசை நிகழ்ச்சிகளோ, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளோ நடப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. மாவீரர்கள் விதைக்கப்பட்டிருக்கும் மண்ணில் என்ன கேளிக்கையும் பொழுதுபோக்கும் வேண்டிக் கிடக்கிறது என்று குமுறுவார்கள். ஆனால், அவர்கள் தங்கள் நாடுகளுக்கு வரும் தென் இந்தியக் கலைஞர்களோடு 100, 200 யூரோக்கள், டொலர்களைக் கொடுத்து இரவு விருந்தில் கலந்து கொள்வார்கள். நிகழ்வுகளில் பங்கெடுப்பார்கள். கேளிக்கையும் பொழுதுபோக்கும் தங்களுக்குரியது, மாறாக தாயகத்திலுள்ள மக்களுக்குரியது அல்ல என்ற நிலைப்பாட்டிலுள்ளவர்கள் அவர்கள். இவ்வாறான கட்டங்கள்தான், தாயகத்திலுள்ள மக்களை அதிருப்தி மற்றும் ஆற்றாமையின் பக்கத்துக்கு தள்ள வைக்கின்றன.

இந்தப் பத்தி எழுதப்படும் தருணத்தில் கூட (நேற்று சனிக்கிழமை) வெடுக்குநாறி ஆலய சிவ

தொடர்ச்சி ▼

# தமிழ் மக்கள் போராட்டங்களை புறக்கணிக்கிறார்கள்?

**தொடர்ச்சி▲**

ராத்திரி பூசை கைதுகளுக்கு எதிராக வவுனியாவில் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அந்தப் போராட்டங்களில் மக்களின் பங்களிப்பு என்பது போதுமானதல்ல. வெடுக்குநாறி கைதுகளைக் கண்டித்து கடந்த நாள்களில் யாழ்ப்பாணம் நல்லூரில் தொடங்கி பல போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுவிட்டன. இந்தப் போராட்டங்களில் எல்லாமும் ஒரே தரப்பினரே போராட்டக்காரர்களாக நிற்கிறார்கள். அங்கு மக்களின் பங்களிப்பு என்பது மிகச் சொற்பமானது. தமிழ் மக்கள் இறுதியாக கணிசமான அளவில் பங்கெடுத்த போராட்டங்கள் என்றால், “எழுக தமிழ்“ மற்றும் “பொத்துவில் 2 பொலிகண்டி” போராட்டங்களைச் சொல்ல முடியும். அதிலும் அதிகபட்சமாக ஐந்தாயிரம் பேர் கலந்துகொண்டிருப்பார்கள். அதனைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால் போராட்டங்களை நோக்கி சில நூறு பேரைத் திரட்டுவது கூட இன்றைக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள், அமைப்புக்களினால் முடியாமல் போய்விட்டது.

ஏன் இந்தப் போராட்டங்களை நோக்கி மக்கள் திரள்கிறார்கள் இல்லை என்று கேள்வி எழுப்பினால், அதற்கும் அரசியல்வாதிகளினதும், அமைப்புக்களினதும் இயலாமையும் சுயநலமுமே காரணமாக இருக்கின்றன. எழுக தமிழ்ப் போராட்டம், பொத்துவில்2பொலிகண்டி போராட்டங்களில் தமிழ் மக்கள் கட்சி பேதங்களைக் கடந்து நின்று பெருமெடுப்பில் பங்குகொண்டார்கள். ஆனால், அந்தப் போராட்டங்களின் முடிவில், அதனை தனிக் கட்சிகள், தனிநபர்கள் கைப்பற்ற முயன்றார்கள். எழுக தமிழ் விக்னேஸ்வரனை நன்ளாடன்றா உறுப்பினராக மாற்றுவதற்காக மட்டுமே நடத்தப்பட்டது மாதிரியான தோற்றத்தோடு முடிந்து போனது. பொத்துவில்2பொலிகண்டி போராட்டம் வேலன் சுவாமி என்று தன்னை முன்னிறுத்தும் நபரினால் கைப்பற்ற முயற்சிக்கப்பட்டது.

இன்னொரு பக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்த தொடர் போராட்டங்களை அரசியல் கட்சிகள் கைப்பற்ற முயன்றன. அதனால், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மத்தியிலேயே பெரும் பிளவுகள் ஏற்பட்டு, பல குழுக்களாக மாறின. தங்களுக்குள் முட்டிமோதி ஏட்டிக்கு போட்டியாக ஊடக சந்திப்புக்களை நடத்தி திட்டித் தீர்ப்பதோடு முடிந்து போனது. இவ்வாறான நிலை நீடிக்கும் போது, தமிழ் மக்கள் போராட்டங்கள் மீது நம்பிக்கை இழக்கத் தலைப்படுவார்கள். இன்று நிகழ்ந்துகொண்டிருப்பது அதுதான். எந்தப் போராட்டத்தை எடுத்துக்கொண்டாலும் அதன் மீது தங்களின் பெயர்களைப் பொறிக்கும் அரசியலை செய்வதில் கட்சிகளும் அமைப்புக்களும் குறியாக இருக்கின்றன. அவை, தேர்தல் வாக்குக்கான குறு நோக்கங்களைக் கொண்டிருக்கின்றன. இதனால், அந்தப் போராட்டங்கள் தொடர்பிலான கனதி வெகுவாக குறைந்து, சில நிமிட போராட்டமாக, ஊடகங்களுக்கான செய்திகளாக மாத்திரம் சுருங்கி விடுகின்றன.




தமிழ்த் தேசியப் போராட்டம் என்பது இப்போதைக்கு முடிந்து போகப்போகும் ஒன்றல்ல. அது, அடக்குமுறைகளுக்கு எதிராக தொடர வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருப்பது. அது பெரும் அர்ப்பணிப்பைக் கோருவது. அந்தக் களத்தை அறமற்ற தரப்பினர் ஆக்கிரமித்திருக்கும் போது, தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்து விலகத் தலைப்படுவார்கள். அது, எதிரிகளுக்கும் துரோகிகளுக்குமே வளமான வாய்ப்புக்களை உருவாக்கும். அதனைப் புரிந்து கொள்ளாது நின்று, அழுது புலம்புவதால் எந்தப் பயனும் இல்லை.



# ஐக்கியப்பட்டு உறுதியாகச் செயற்பட தமிழரசு மட்டக்களப்புக் கிளை முடிவு

மட்டக்களப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் என்றும் ஒற்றுமையாக செயற்பட்டு தந்தை செல்வாவின் வழியில் எமது மக்களுக்கான பயணத்தை தொடர்வார்கள் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அறிவித்திருக்கின்றார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட கிளைத்த லைவரான இராசமாணிக்கம் சாணக்கியன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இதன்போது தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகள் குறித்து பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்ற நிலையில் கட்சியை ஒற்றுமையுடன் முன்கொண்டுசெல்வதற்கு அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது என்று சாணக்கியன் தெரிவித்தார்

நிகழ்வின் பின்னர் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டவை வருமாறு:–

எமது தமிழரசுக் கட்சியினர் என்றும் ஒற்றுமையாக செயற்பட்டு தந்தை செல்வாவின் வழியில் எமது மக்களுக்கான பயணத்தை தொடர்வார்கள். உட்கட்சி மோதல்கள் எமது மக்களுக்கான குறிக்கோள்கள் – கொள்கைகளை – சிதைப்பதில்லை. நாம் இன்னும் வலுப்பெற்றுள்ளோம். ஓர் குடும்பத்தில் மனஸ்தாபங்கள், சிறு சிறு சண்டைகள் வருவது இயல்பு. ஆனால் அவை தீரும் போது வரும் ஒற்றுமை மற்றும் நம்பிக்கை உறுதி தற்போது எமக்கும் ஏற்பட்டுள்ளது. நாம் என்றும் எம் மக்களுக்காக. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்று சொல்வார்கள். அதற்கு நாம் இடமளிக்கப்போவதில்லை.

தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கிளை கடந்த காலங்களில் நடைபெற்ற கசப்பான சம்பவங்களை மறந்து ஓரணியில் செயற்பட தீர்மானித்தத்துடன், தேசிய ரீதியில் தமிழரசுக் கட்சிக்குள் எழுந்துள்ள செயலாளர் தெரிவு உள்ளிட்ட சில உட்கட்சி பிரச்சினைகளை தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை கூட்டங்கள் நடைபெறும் போது அங்கு பேசி தீர்மானிப்போம். மாவட்டக் கிளை என்ற அடிப்படையில் அனைத்து தமிழரசுக் கட்சி உறுப்பினர்களும் ஓரணியில் திரண்டு ஒற்றுமையுடன் செயல்படுவோம். எதிர்வரும் காலங்களில் நடைபெற உள்ள தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வாவின் பிறந்தநாள் நிகழ்வுகள் மற்றும் நடைபெற உள்ள இதர நிகழ்வுகளில் அடிப்படையில் புது உத்வேகத்துடன் செயற்பட உள்ளோம், தமிழர்களின் ஏகோபித்த ஆதரவை பெற்ற கட்சி என்ற வகையில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமிழரசுக் கட்சிக்கான ஆதரவை வழங்கி, வருகின்ற பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை தமிழரசுக் கட்சி கைப்பற்றுவதை உறுதிப்படுத்துவோம். – என்று கூறப்பட்டது.







# மாதகல் இறங்குதுறையை சுத்தப்படுத்தும் நடவடிக்கை

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மாதகல் இறங்குதுறை கடற்கரையை சுத்தப் படுத்தும் நிகழ்வு நேற்றுக் காலை பிரதேச சபையின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சபையின் செயலா ளர், சபை உத்தியோகத்தர்கள், சண் டிலிப்பாய் பிரதேச செயலகப் பணியா ளர்கள், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். நிகழ்வை சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி என். செல் வக்குமாரி ஆரம்பித்து வைத்தார்.

# மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த கிரனேட் மீட்கப்பட்டது





(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொது மயானத்தில் விடுதலைப் புலிகளால் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டி ருந்ததாகக் கூறப்படும் கைக்குண்டு ஒன்றை நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை விசேட அதிரடிப்படையி னர் தோண்டி எடுத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேசியப் புலனாய்வுப் பிரிவின ருக்குக் கிடைத்த தகவல் ஒன்றி னையடுத்து விசேட அதிரடிப்படை யினர் அந்தப் பகுதியை தோண்டு வதற்காக நீதிமன்றக் கட்டளை ஒன்றை பெற்றனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படை, குண்டுகள் செயலிழக்கும் விசேட பிரிவினர், பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் அந்த மயானத்தில் தோண்டுதல் நடவடிக் கையை மேற்கொண்டனர். அங்கிருந்து கைக்குண்டு ஒன்றை அவர்கள் மீட் டுள்ளனர்.

இதனை வெடிக்கவைத்து அழிப் பதற்காக நீதிமன்ற அனுமதியை பெறும் நடவடிக்கையை விசேட அதிர டிப்படையினர் மேற்கொண்டுவரு கின்றனர் எனப் பொலிஸார் தெரி வித்தனர்.



# தமிழ் மொழி மூலம் முறைப்பாடு செய்வதற்கான அவசர தொலைபேசி இலக்கம் 107 அறிமுகம்!

## நேற்று வவுனியாவில் நிகழ்வு

(கே.வசந்தன்)

தமிழ் மொழி மூல முறைப்பாட்டுக்கான அவசர தொலைபேசி இலக்கம் 107 இன் அறிமுக நிகழ்வு நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் சாமந்து விஜயசேகர தலைமையில் பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலய வாளாகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் 107 என்ற அவசர தொலைபேசி இலக்கம் தமிழ் மொழி மூல முறைப்பாட்டுக்காக நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிலான் அலஸ், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக ஆகியோரின் பங்குபற்றுதலுடன் அது அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வட மாகாண சிரேஸ்ட பொலிஸ் மா அதிபர் மஹிந்த குணரட்ண உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள், விசேட அதிரடிப்படை அதிகாரிகள், வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மதத் தலைவர்கள், கிராம அலுவர்கள், சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.










# பசுமை அமைதி விருதுகள் விழா இன்று வீரசிங்கம் மண்டபத்தில்!

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் 2023ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகளை வழங்கும் பரிசளிப்பு விழாஇன்று 17ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கடந்த ஆண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட சூழல் பொதுஅறிவுப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்கள் சூழலியல் ஆசான் க.சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகளும், 2023ஆம் ஆண்டின் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளர் தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும், இவ்விழாவில் 2023ஆம் ஆண்டில் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மாணாக்க உழவர் மதிப்பளிப்பும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தாவராவதானி மதிப்பளிப்பும் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ், கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் எம். எஸ். ஏ. கலீஸ் இருவரும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

இலங்கையில் சுற்றுச்சூழல் சார்ந்து வழங்கப்பட்டு வரும் விருதுகளில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் முன்னிலை விருதுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் - 16.03.2024




இன்று சிறப்பான நாளாக இருக்கும். உங்கள் முயற்சி மூலம் இலக்கை அடைவீர்கள். உங்களிடம் தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும். இன்று தன் னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிகளை தரத்துடன் முடித்துத் தருவீர்கள். பணியிடத்தில் உங்கள் திறமையின் மூலம் நற்பெயரை எடுப்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக இருப்பீர்கள். அவரை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பணப்புழக்கம் காணப்படும். புதிய முதலீடுகளில் பணத்தை சேமித்து பயனடையலாம்.

இன்று நல்ல ஆரோக்கியமும் தன்னம்பிக்கையும் காணப்படும்.




இன்று வளர்ச்சி குறைவாக காணப்படும். பெரிய லட்சியங்களை அடைய இன்று சாத்தியம் குறைவாக இருக்கக்கும். சிறப்பாக திட்டமிட்டால் இன்று வெற்றி அடையலாம்.

உங்கள் மேலதிகாரிகளால் எதிர்பாராத தொல்லைகள் ஏற்படும். கடினமான பணிகள்காரணமாக வேலையை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் மனதில் அசௌகரியமான உணர்வு இருக்கும். இது உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கக்கும்.

பணவளர்ச்சி திருப்திகரமாக இருக்காது. இன்றைய செலவுகளை சமாளிக்க இயலாது. திட்டமிட்டுச் செலவு செய்ய வேண்டும்.

ஒவ்வாமை காரணமாக தொண்டையில் பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று அமைதியாக மகிழ்ச்சியாக இருங்கள். வெற்றி பெறுவதற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில உங்களுக்கு திருப்தி காணப்படாது. உறு- தியுடனும் கவனமாகவும் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் சகஜமாக இருக்க இயலாது. அவரை வெளியிடங்களுக்கு கூட்டிச் செல்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படாது. இது உங்களுக்கு சிறிது ஏமாற்றத்தை அளிக்கும். அதிக செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

வயிறு உபாதைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. சரியான நேரத்தில் உணவு உண்ண வேண்டும். கார உணவு வகைகளை தவிர்க்க வேண்டும்.




இன்று அமைதியாக இருக்க வேண்டிய நாள். தெய்வீகப் பாடல்களை கேட்பதன் மூலம் நீங்கள் ஆறுதலைப் பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களின்ஆதரவு குறைந்து காணப்படும். பெண் ஊழியர்களிடம் கவனமாக இருப்பது நல்லது.

உங்களுக்கு சில குடும்ப பிரச்சினைகள் காணப்படும். இதனால் உங்கள் பிரியமானவருடன் நேரத்தை கழிக்க இயலாது. உங்களால் முடிந்த அளவு அவருக்கு நேரம் ஒதுக்குங்கள்.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். மேலும் பண இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கண் காணியுங்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எடுக்கும் முக்கியமான முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

நீங்கள் குறைந்த நேரத்தில் விரைவாக பணியை முடிப்பீர்கள். இது உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். நீங்கள் தொழில் சார்ந்த அணுகுமுறையை கையாள்வீர்கள்.

நீங்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். நீங்கள் வெளியிடங்களுக்கு செல்ல வாய்ப்பு உள்ளது.

இன்று அதிக அளவு பணம் காணப்படும். அதை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.




குறைந்த முயற்சியில் உங்கள் இலக்குகளை எளிதாக அடைவீர்கள். இன்று நகைச்சுவை போக்கின் காரணமாக சிறந்ததை சாதிப்பீர்கள்.

சிக்கலான பணகளைக் கூட எளிதில் கையாள்வீர்கள். இன்று உங்களுக்கு புதிய பணிகள் வழங்கப்படும். நீங்கள் அதனை விரும்பி செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் நகைச்சுவை அணுகுமுறையை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

உங்களிடம்அதிக பணம் காணப்படும். எளிதில் சேமிக்க இயலும். எதிர் காலத்திற்கென சிறிது பணத்தை ஒதுக்குவீர்கள்.

இன்று நீங்கள் மிகுந்த ஆற்றலுடனும் புத்துணர்ச்சியுடனும் காணப்படுவீர்கள்.




விஷயங்களைக் கையாள்வதில் நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். இன்று சிறிதளவு பொறுமைஅவசியம்.

இன்று அதிக பணிச்சுமை காணப்படும். ஆனால் முறையான திட்டமிடல் மூலம் சிறப்பாக செயலாற்றலாம். உங்கள் சக பணியாளர்களை புரிந்து நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். என்றாலும் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு வளர சுமாரான வாய்ப்புகளே உள்ளன.

சிறிய கடன் மூலம் உங்களுக்கு பணம் கிடைக்கும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும்.

இன்று பயணத்தின் போது அல்லது வாகனம் ஓட்டும் போது விபத்தை சந்திக்கநேரலாம்.




இன்று சற்று சிரமமான நாள். இன்று பொறுமையும் உறுதியும் மிகவும் அவசியம். சரியான திட்டமிடல் மிகவும் அவசியம்.

இன்று பணிச்சூழல் பரபரப்பாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடன் சில சிக்கல்கள் காணப்டும். உங்கள் பணிகளை திட்டமிடுவது நல்லது.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையேயான விவாதம் காரணமாக நீங்கள் சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். அமைதியாக இருக்கவும் உறவில் மகிழ்ச்சியை எப்படி தக்க வைத்துக் கொள்வது என்றும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணம் சேமிக்க இயலாது. அதிகரிக்கும் செலவினங்கள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தேவையற்ற விஷயங்களுக்காக இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.03.2024




பிரார்த்தனை மற்றும் தியானம் இன்று உங்களுக்கு வழி காட்டும். அதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சி பெறுவீர்கள். இன்று அனைத்தும் உங்கள் கைகளில் தான் உள்ளது.

பணியிடச் சூழல் சவாலானதாகவும் போட்டியுடையதாகவும் காணப்படும்.கடினமாக பணிகளைக் கையாள்வதை சவாலாக உணர்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் சமூகமான உறவு காணப்படாது. தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று நிதிநிலைமை கவலையளிப்பதாக இருக்கும். இன்று பணப்புழக்கம் சீராக இருக்காது. இன்று செலவுகள் அதிகம செய்ய நேரலாம்.

இன்று நல்ல ஆரோக்கியத்துடனும் அமைதியுடனும் காணப்படுவீர்கள். பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.




இன்று நீங்கள் அமைதியான அனுசரனையான போக்கை மேற்கொள்ள வேண்டும். இதனால் வளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. வெற்றியும் கிடைக்கும்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக காணப்படும். இதனால் தவறுகள் நேரலாம். இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று உங்கள் துணையுடனான உறவில் சுமூகமான சூழ்நிலை காணப்படாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதம் ஏற்படலாம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். பணத்தை கவனமாக கையாள வேண்டும். இல்லாவிடில் பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

தேவையற்ற கவலைகள் காரணமாக உங்களுக்கு தோள்களில் மற்றும் முதுகில் வலி ஏற்படலாம்.




இன்று உங்களிடம் தைரியமும் உறுதியும் காணப்படும். இதனால் வளர்ச்சி காணப்படும். தைரியமான மனவலிமை காரணமாக வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் அபாரமான வளர்ச்சி காணப்படுகின்றது. பணியின மூலம் ஆதாயம்பெற இந்த நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பிறருக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள். அன்பு நிறைந்து காணப்படும்.

இன்று முக்கிய முதலீடுகள் செய்வதற்கு உகந்த நாள். அதன் மூலம் மிகுதியாக பணம் கிடைக்கும். அதன் மூலம் நீங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவீர்கள்.

இன்று மிகவும் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று சிக்கலான சூழ்நிலைகளை சமாளிக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அத்தகைய சூழலில் சிறப்பாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

விரைந்து பணிகளை முடிக்க உங்கள்சக பணியாளர்களுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். பணிகள் அதிகமாக இருப்பதால் கட்டுப்படுத்துவது உங்கள் கைமீறிய செயலாக இருக்கும். உங்கள் திறமையை பணியிடத்தில் வெளிப்படுத்த வேண்டியது அவசியம்.

உங்களின்அகந்தைப் போக்கும் பிடிவாதமும் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். சூழ்நிலைக்கேற்ப நீங்கள் உங்கள் துணையுடன்அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

சில தேவையற்ற சூழ்நிலைகளை சந்திக்க வேண்டியிருக்கும்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.



Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park





# மட்டக்களப்பு புளியந்தீவில் ஜெப ஆலயம் திறந்துவைப்பு

(பழுவூரான்)

மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புளியந்தீவுப் பகுதியில் கடந்த 24 வருடங்களாக பாதுகாப்பு படையினர் வசமிருந்த மட்டக்களப்பு வைத்திய சாலை வீதி லைட் ஹவுஸ் திருச்சபை ஜெப மையத்தின் காணி விடுவிக் கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைத்த தன் பின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஜெப ஆலயம் நேற்று சனிக்கிழமை சுப நேரத்தில் பொதுமக்களின் வழி பாட்டுக்காக மீள் பிரதிஷ்ட செய்து திறந்து வைக்கப்பட்டது.

தேவாலயதின் சிரேஷ்ட போதகர் அருட்பணி கே.விஜயன் தலைமை யில் இடம் பெற்ற இவ்விழாவில், பிர தம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதன் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கே. எம். ஏ.கே. பண்டார, அருட்பணி கே. கிருஸ்ணராஜா, போத கர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போத. ஜெப ஆலயம் மாவட்ட அரசாங்க அதிபரினால் திறந்து வைக் கப்பட்டு விசேட வழிபாடுகளும் இடம் பெற்றன். இதற்காக உதவிய மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜெஸ்டினா முரளீதரன் கௌரவிக்கப்பட்டார்.









# டெங்கு காய்ச்சலால் 2 மாதங்களில் 7 பேர் பலி கொழும்பில் அதிகளவான நோயாளர்கள் பதிவு



கடந்த இரண்டு மாதங்களில் டெங்கு காய்ச்சலால் 7 பேர் உயிரிழந்துள்ள னர்.

அத்துடன், இந்தக் காலப்பகுதியில் 18 ஆயிரத்து 556 டெங்கு நோயா ளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரி வித்துள்ளது.

இந்த மாதத்தில் கடந்த 15 நாள் களில் மாத்திரம் 2 ஆயிரத்து 132 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள னர்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

டெங்கு அதி அபாய வலயங்களாக 10 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு குறிப் பிட்டுள்ளது.